# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2012
# தமிழ்மொழி
## வளர் தமிழ் 12

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழே உலகின் முதன்மொழி என்று சான்று காட்டி நிறுவிய பேரறிஞர்

அ) மறைமலை அடிகள் ஆ) தேவநேயப்பாவாணர்

இ) தனிநாயகம் அடிகள் ஈ) பரிதிமாற் கலைஞர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. இன்று இலெமூரியா எனப்படும் பண்டைத் தமிழகம்

அ) சுமேரியா ஆ) குமரிக்கண்டம்

இ) நாவலந்தீவு ஈ) சிந்துவெளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. பழந்தமிழர் வீரத்தைப் பற்றிக் கூறும் நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ ) புறநானூறு இ) ஐங்குறுநூறு ஈ) கலித்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. வேற்றுமைகள்

அ) பத்து ஆ) எட்டு இ) ஐந்து ஈ) ஆறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. 'கலிங்கத்துப் பரணி' என்ற இலக்கியம் கூறுவது

அ) சோழமன்னனின் போரை ஆ) சேரமன்னனின் போரை

இ) பாண்டிய மன்னனின் போரை ஈ) ஆங்கிலேயரின் போரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. வீரத்தின் உயர்நிலை

அ) மகிழ்ச்சி ஆ) மானம் இ) தோல்வி ஈ) கவலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. திருக்குறளிலுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை

அ) 143 ஆ) 123 இ) 133 ஈ) 153

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. அகவை முதிராத இளமையில் சோழரையும் சேரரையும் போரில் வெற்றிகண்ட மன்னன்

அ) பாரி ஆ) நெடுஞ்செழியன்

இ) இராசஇராசசோழன் ஈ) இராவணன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. முதற்பொருள் குறிப்பது

அ) நிலமும் பொழுதும் ஆ) நீரும் மலரும்

இ) அகமும் புறமும் ஈ) செடியும் கொடியும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. புறநானூற்றுப் பாடலில் சோழனும் சேரனும் போரில் நேருக்குநேர் தோன்றியது எவற்றிற்கு ஒப்பிடப்படுகின்றன?

அ) உண்மைக்கும் நேர்மைக்கும் ஆ) திங்களுக்கும் கதிரவனுக்கும்

இ) தாமரைக்கும் கதிரவனுக்கும் ஈ) வானத்துக்கும் நிலவுக்கும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. தமிழகம் வீழ்ச்சியடைந்தது

அ) ஆரியரால் ஆ) திராவிடரால் இ) நாயக்கரால் ஈ) சமணரால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. 'கோ' என்ற சொல் குறித்து நிற்பது

அ) மன்னனை ஆ) மாணவனை இ) ஆசிரியரை ஈ) சிறுவனை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று

அ) திருக்குறள் ஆ) மணிமேகலை

இ) ஆத்திசூடி ஈ) மூதுரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. இலங்கையின் தெற்கிலும் வடக்கிலும் வாழ்ந்தவர்கள்

அ) இந்தியர், ஆரியர் ஆ) சேரர் , சோழர்

இ) சோழர், பாண்டியர் ஈ) இயக்கர் , நாகர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. குறிஞ்சிப்பூ எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும்

அ) எட்டு ஆ) பன்னிரண்டு

இ) ஆறு ஈ) பத்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. குறிஞ்சியும் முல்லையும் வளம் குறைந்ததால் தோன்றிய நிலம்

அ) முல்லை ஆ) பாலை இ) குறிஞ்சி ஈ) நெய்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. வேற்றுமைத்தொகைக்கு எடுத்துக்காட்டு

அ) பால் நிலா ஆ) ஓடுநீர்
இ) பால் குடித்தான் ஈ) முத்துப் பல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. நதியில் விளையாடிக் கொடியில் தலை சீவி நடந்த இளந் தென்றலே எனப் பாடியவர்

அ) கண்ணதாசன் ஆ) கம்பர் இ) இளங்கோ ஈ) பாரதியார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. மேனிக்கு இதம் தரும் காற்று

அ) சூறாவளி ஆ) வாடை இ) கொண்டல் ஈ) தென்றல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. பெரும் பொழுது ஒன்று

அ) இளவேனில் ஆ) மாலை இ) காலை ஈ) வைகறை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. எந்த அதிகாரத்தின் பின் ஒழுக்கமுடைமை வைக்கப்பட்டுள்ளது?

அ) பண்புடைமை ஆ) அன்புடைமை
இ) அடக்கமுடைமை ஈ) அறிவுடைமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. பார்ப்பான் என்பது

அ) கரணியப் பெயர் ஆ) இடுகுறிப் பெயர்
இ) கரணிய இடுகுறிப் பெயர் ஈ) இயற் பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. சமணமும் பௌத்தமும் வேரூன்றிய காலம்

அ) அறநெறிக் காலம் ஆ) சோழர் காலம்
இ) பல்லவர் காலம் ஈ) கழகக் காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. பாடிய சிறுமி - இதில் வந்துள்ள பாடிய என்பது

அ) வினைமுற்று ஆ) வினையெச்சம்

இ) பெயரெச்சம் ஈ) வினையடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. தமிழ்நாட்டில் பல்லவர் ஆட்சி ஏற்பட்ட நூற்றாண்டு

அ) கி.பி. 5ம் நூற்றாண்டு ஆ) கி.பி. 6ம் நூற்றாண்டு

இ) கி.பி. 7ம் நூற்றாண்டு ஈ) கி.பி. 8ம் நூற்றாண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. தென்னிந்தியாவில் இருந்து படையெடுத்து வந்த தமிழர்கள் இலங்கை அரசைக் கைப்பற்றினர். எனக்கூறும் நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) மகாவம்சம்

இ) மணிமேகலை ஈ) தீபவம்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. போர்க்களத்தில் புறமுதுகில் புண்பட்டு உயிர் நீத்தல்

அ) வீரமிழத்தல் ஆ) வடக்கிருத்தல்

இ) வாகைசூடல் ஈ) கவலையடைதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. கேரளம் என்று இன்று அழைக்கப்படும் நாடு

அ) சோழநாடு ஆ) பாண்டியநாடு இ) சேரநாடு ஈ) தமிழ்நாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. குறள் : மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர் நீப்பர் ................ வரின்.

அ) இழிவு ஆ) மானம் இ) பழிச்சொல் ஈ) நாணம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. பெயர்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்

அ) நால்வகை ஆ) அறுவகை

இ) எண்வகை ஈ) ஐவகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. பாண்டிய மன்னர்கள் தம் முடியை எங்கே பாதுகாத்தனர் ?

2. பல்லவர் துணையோடு ஆரியர் தமிழகத்தில் என்ன செய்தனர் ?

3. தென்றலின் வரவுபற்றிச் சிறப்பித்துக் கூறிய புலவர்கள் இருவரின் பெயர்களைத் தருக.

4. கரிகாற்சோழன் எக் காலத்து மன்னன்? அவன் அணைகட்டுவித்த ஆற்றின் பெயர் என்ன?

5. ஆரியர் எனப்படுவோர் யார் ?

6. எழுவரை வென்ற இளவலின் பெயர் என்ன?

7. பின்வரும் குறளின் பொருளைத் தருக.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

(புள்ளிகள் 10)

## 3) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

உலகில் கோடானுகோடி உயிர்கள் வாழ்கின்றன. அவை அனைத்தும் வாழத் தேவையான சூழலை இயற்கை அளித்துள்ளது. இவற்றுள் எல்லாம் உயர்ந்த உயிரியாக மாந்தன் காணப்படுகின்றான். சிந்திக்கும் திறனும் அறிவாற்றலும் உள்ள உயிரியாகக் காணப்படுபவன் அவனே. ஒரு காலத்தில் பண்பாட்டின் உச்சியில் வாழ்ந்து கொண்டிருந்தது மாந்த இனம். அந்த இனத்திலும் தனக்கென ஓர் இடத்தினைப் பிடித்து தலைநிமிர்ந்து வாழ்ந்தது தமிழ் இனம். இசையிலும் கலைகளிலும் சிறந்து விளங்கியது எம்மினம். யாழ்நூலின் மூலம் ஆயிரம் நரம்புள்ள யாழ்பற்றிக் கூறி உலகையே அசைத்தவர் எம்மினத்தின் விபுலாநந்தஅடிகள். கட்டிடக் கலையின் உச்சிக்கே சென்ற எம்மினத்தின் வெளிப்பாடுதான் தஞ்சைப் பெருங்கோயில். அதைக் கட்டியவன் இராசஇராசசோழன் எனும் தமிழ் மன்னனே. தமிழைப் பழித்தனர் என்ற ஒரே கரணியத்தினால் வட அரசர்களான கனக விசயனைப் போரில் வென்று; அவர்கள் தலையில் கல்லைச் சுமந்துவரச் செய்த சேரன்செங்குட்டுவனும் எம் தமிழ் மன்னனே. ஆசிய நாடுகள் முழுவதும் புலிக்கொடியைப் பறக்கச் செய்து தம் வீரத்தை நிலை நாட்டிய சோழமன்னர்களும் எம்மினத்தவர்களே. அதிகம் ஏன்? சீனத்தில் பேர் போன குங்ஃபு கலையைத் தோற்றுவித்த போதிதர்மன் கூட எமது இனத்தவன் என அறியும் போது ஏற்படுகின்ற மகிழ்விற்கு அளவே இல்லை. ஏன்? இன்றும் கூட புலம்பெயர் நாடுகளே வாய் பிளக்கும் அளவிற்கு எம்மின இளைஞர்கள் கல்வியில் உயர்ந்து நிற்கின்றனர்.

ஆனால் இன்றைய எம்மினத்தின் நிலையை நோக்கும் போது வேதனை தருவதாகவுள்ளது. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு' என்ற பழமொழி எம்மினத்திற்குச் சாலப்பொருந்தும். எங்களிடையே நான் பெரிது நீ பெரிது எனப் போட்டியிட்டு, இறுதியில் எதிரியைப் பெரியவனாக்கி விடுகின்றோம். இத்தகைய எம் பலவீனத்தை எதிரி தன் பலமாக்கிக் கொண்டு காய்களை இலகுவாக நகர்த்தித் தன் வேலையைச் சுலபமாக்கிக் கொள்கின்றான். இந்நிலை தொடர்ந்தால் எங்கள் இனத்தின் விடுதலை எட்டாத தூரமாகிவிடும். இதை உணர்ந்து நாம் எப்போதும் ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபட வேண்டும். அதை இன்றே செய்வோம். நன்றே செய்வோம். செய்தால் வென்றே தீருவோம்.

1. தனக்கென ஓர் இடத்தினைப் பிடித்துத் தலைநிமிர்ந்து வாழ்ந்த இனம் எது?

______________________________

______________________________

2. சீனத்திற்கு குங்ஃபு கலையைப் போதித்தவன் யார் ?

______________________________

______________________________

3. ஆயிரம் நரம்புள்ள யாழ் பற்றி உலகிற்குக் கூறியவர் யார் ?

______________________________

______________________________

4. இங்கு வந்துள்ள பழமொழி எது?

______________________________

______________________________

5. எதிரி எவ்வாறு காய்களை நகர்த்துகிறான்?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

## 4) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

வெற்றி மீது வெற்றிவந்து என்னைச் சேரும்- அதை
வாங்கித் தந்த பெருமைகள் எல்லாம் உன்னைச் சேரும்
பெற்றெடுத்துப் பேர் கொடுத்த அன்னையல்லவா? - நீ
பேசுகின்ற தெய்வம் என்பது உண்மையல்லவா?
தாய்ப்பாலில் வீரம் கண்டேன்
தாலாட்டில் தமிழைக் கண்டேன்
உண்ணாமல் இருக்கக் கண்டேன்
உறங்காமல் விழிக்கக் கண்டேன்

மற்றவருக்கு வாழுகின்ற உள்ளம் அல்லவோ - அது
உன்னிடத்தில் நான் அறிந்த பாடம் அல்லவா
அன்னை சிந்தும் கண்ணீர் எல்லாம்
பிள்ளையினால் பன்னீர் ஆகும்.
ஆசைதரும் கனவுகள் எல்லாம்
அவனால் தான் நனவுகள் ஆகும்

அன்றுதொட்டு நீ நினைத்த எண்ணம் என்னம்மா - இதை
இன்று தொட்டு நான் முடிக்கும் வண்ணம் பாரம்மா. (வெற்றி மீது )

1. இப்பாடல் யாரால் யாருக்குப் பாடப்பட்டது?

_______________________________________________

_______________________________________________

2. தாய்ப்பாலிலும் தாலாட்டிலும் எவற்றைக் கண்டதாகக் கூறுகின்றார்?

_______________________________________________

_______________________________________________

3. தாயிடம் தான் அறிந்த பாடம் என்ன என்று கவிஞர் குறிப்பிடுகின்றார்?

_______________________________________________

_______________________________________________

4. ஒரு பிள்ளைக்காகத் தாய் எவற்றை எல்லாம் செய்கின்றார்?

_______________________________________________

_______________________________________________

5. இப்பாடலில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

(புள்ளிகள் 10)

## 5) இலக்கண/மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகள் எத்தனை? அவற்றின் வகைகளைத் தருக.

2. வேற்றுமைகள் எத்தனை? 2ம் 7ம் இரண்டு வேற்றுமை உருபுகளுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

3. பின்வரும் உவமையணியின் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றைத் தருக.

மதிமுகம்

உவமானம் :

உவமேயம் :

பொதுத்தன்மை :

4. பெயர்ச் சொற்கள் எத்தனை வகைப்படும்? இடப்பெயருக்கும் குணப்பெயருக்கும் எடுத்துக்காட்டுத் தருக.

5. பின்வரும் மரபுச் சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியங்கள் எழுதுக.

தன்னந்தனியே :

கையும் மெய்யும் :

அழுதழுது :

(புள்ளிகள் 15)

## 6) பந்தியை வாசித்து; மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

இயற்கையின் கொடைகளோ அளவற்றவை. புல்நுனியில் வைரங்களாக ஒளிவிடும் பனித்துளிகள் தொடங்கி வானளாவப் பூத்துக் குலுங்கும் பசுமையான மரங்கள் வரையும் எங்குமே சிரிக்கின்றாள் இயற்கைத் தாய். மலைகளில் இருந்து வீழும் அருவிகளாக, தவழ்ந்து ஓடும் ஆறுகளாக, எல்லையற்ற கடலாக, முடிவற்ற நீல வானமாக எங்குமே இயற்கை அழகு. இரவானதும் வானத்தில் கண்சிமிட்டும் விண்மீன்கள்! அந்த விண்மீன்களின் நடுவினிலே எழிலரசியாக உலாவரும் வெண்ணிலா! இது இரவு நேரத்தையும் குளிர் பொருந்திய பகலாக்கிக் கொண்டிருக்கும். நிலவு நேரக் கடற்கரைக் காட்சி! மதி வரவால் பொங்கியெழும் கடல்! ஓடிவந்து மண்ணை முத்தமிட்டுச் செல்லும் அலை! அந்த அலைகளில் எமது கால்களை நனைக்கும் போது ஏற்படும் அழகுணர்ச்சி! எத்தனை வியப்புகள் எம்மைச் சுற்றி! இத்தனையும் இயற்கைத் தாய் எமக்கு அளித்த கொடைகள் அல்லவா? எமக்குக் கொடையாகக் கிடைத்த இவற்றை நாங்களே மாசுபடுத்துவது என்பது கவலைக்குரிய ஒன்று அல்லவா? இயற்கையை நாங்கள் மதிக்காவிட்டால் எமக்கு இன்பம் தந்த இவ் இயற்கையே பேரிடராக மாறி எம்மை அழித்து விடும். இதை நன்கு புரிந்து கொண்டு இயற்கைத் தாயைப் பாதுகாப்போம்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள் :**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

(புள்ளிகள் 05)

7) 300 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.

- ★ நான் ஒரு தமிழ் ஆசிரியரானால்.......
- ★ ஐக்கிய நாடுகள் சபையும் அமெரிக்கத் தீர்மானமும்.
- ★ தென்னிந்திய அரசியல் உறவுகள்.

(புள்ளிகள் 20)